www.Padasalai.Net

01.04.2024 முதல் 30.06.2024
ஆறு மாதங்களுக்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay Authorization for the month of
April – 2024 to June –2024)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**கடித (efile) எண்./3770/பக5(1)/2024 –1, நாள்.30.04.2024**

அனுப்புநர்
திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் 2011–12ஆம் கல்வியாண்டில் 710 ஊராட்சி ஒன்றிய மாநகராட்சி /நகராட்சி/ நலத்துறை நடுநிலைப் பள்ளிகளை 6 முதல் 10 வகுப்புகள் கொண்ட அரசு / மாநராட்சி / நகராட்சி /நலத்துறை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தக்கபட்ட பள்ளிகளுக்கு 3550 பட்டதாரி ஆசிரியர்கள் 710 ஆய்வக உதவியாளர்கள் 710 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு முடிவடைந்துவிட்டது – 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு (Express Pay Order) வெளியிடப்பட்டுள்ள நிலையில், 01.04.2024 முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குவது – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை நிலை எண்.198 பள்ளிக் கல்வித் (சி2) துறை நாள் .07.12.2011.
2. அரசாணை நிலை எண்.38 பள்ளிக் கல்வித் (அகஇ1) துறை நாள் .18.02.2016.
3. அரசாணை (1டி) எண்.62 பள்ளிக் கல்வித் (பக5(1)) துறை நாள் .26.04.2021.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் .ந.க .எண். 001512/ எல்/ இ3/2021 நாள். 18.01.2024.
5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் .ந.க .எண். 001512/ எல்/ இ3/2021 நாள். 08.03.2024

--------

www.Padasalai.Net

பார்வை (1)-ல் காணும் அரசாணையில் 2011-12 ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ் 710 ஊராட்சி ஒன்றிய/மாநகராட்சி/நகராட்சி நலத்துறை நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு தலா 5 பட்டதாரி ஆசிரியர்கள் வீதம் மொத்தம் 3550 ஆசிரியர் பணியிடங்களும், 710 ஆய்வக உதவியாளர் பணியிடங்களும் மற்றும் 710 இளநிலை உதவியாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதில் 710 பள்ளிகளில் 158 பள்ளிகளை மத்திய அரசால் ஒப்புதல் நீக்கம் செய்யப்பட்டு 158 உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் மற்றும் அலுவலக பணியாளர்கள் 1106 பணியிடங்களுக்கு ஊதியம் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ள பார்வை (2)-ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை (3)-ல் காணும் அரசாணையில் மேற்காண் 4970 பணியிடங்களுக்கு 31.12.2023 வரை தொடர் நீட்டிப்பு ஆணை பெறப்பட்டு முடிவுற்ற நிலையில், பார்வை -4ல் காணும் 18.01.2024 நாளிட்ட செயல்முறைகளில் 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு (Express Pay Order) வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து இப்பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு பெற கால தாமதம் ஆகும் நிலையில், 01.04.2024 முதல் மேலும் ஆறு மாதங்கள் தொடர் நீட்டிப்பு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேற்காணும் சூழ்நிலையில், மேற்குறிப்பிட்டுள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாத 4970 தற்காலிக பணியிடங்களுக்கு ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை மூன்று மாதங்களுக்கு ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், அரசாணை(நிலை) எண் 334 நிதி(சம்பளம்)த்துறை நாள் 22.10.2022 -ல் துறைச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வின்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

30/4/24

அரசு செயலாளருக்காக

30/4/2024

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6

மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

www.Padasalai.Net

நகல்:-

அரசு கடிதம் / 3770/பக5(1)/2024-1, நாள். 30.04.2024.

இயக்குநரக ந.க எண். 001512/எம்/இ3/2021.

நாள். 08.03.2024.

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைகளின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பெறுநர்:

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

30/4/2024

இணை இயக்குநர்.